தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 29-9-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் தேசிய அளவிலான ஃபுட் எக்ஸ்ப்ளோர் கருத்தரங்கு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டுவரும் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் உணவு பதன்படுத்தல் பொறியியல் துறை மாணவர்களால் FOOD EXPLORE’14 (2013-14) என்ற 8-வது தேசிய அளவிளான கருத்தரங்கம் செப்டம்பர் 26, 2014 அன்று காலை 9 மணியளவில் துவங்கியது. பசியற்ற எதிர்காலத்தை உருவாக்கும் பரந்தநோக்கத்தை, "For Food, For farming, For future" என்ற இவ்விழாவின் கருத்து பங்கேற்பாளர்களுக்கு உணர்த்தும் விதமாய் அமைந்தது. ஆரோக்கியமான தேசத்தை உருவாக்கம் வகையில் வெவ்வேறு பகுதியில் இருந்தும் வருகை தந்த ஏறத்தாழ 300 மாணவர்களின் ஆற்றல்மிக்க படைப்புகள் விளங்கின.

இதன் துவக்கவிழா வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. கு. இராமசாமி அவர்களால் “இப்புவியைப் பாதுகாப்பதில் உணவுபதன்செய் பொறியியலைச் சார்ந்த மாணவர்களுக்கு பெரும்பங்கு உள்ளது என்ற உரையோடு துவக்கி வைக்கப்பட்டது.

மேலை நாடுகளில், உணவினை வீணாக்குவதற்கு விதிக்கப்படும் அபராதங்கள் நாளடைவில் இந்தியாவிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கூறினார். ஜே.எம். பிரட்ஸ் நிறுவனத்தின் இயக்குனரும், “The Society of Indian Bakers”-ன் துணைத்தலைவரும் “Federation of Indian Food Industries”-ன் பொதுச்செயலாளருமான திரு. ஜோசப் லாரன்ஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராய் பங்குகொண்டார்.

அவர் பல்தானிய பிரட்டை குறைந்தபட்சம் ஒருவாரத்திற்காவது தரமாக வைத்துக் கொள்ளும் தொழில்நுட்பங்களை உருவாக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும் FSSAI திட்டத்தின் மூலமாக ஒரு உணவு பதன் சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் 20 தொழிலாளர்களுக்கு ஒரு உணவு பதன்பொறியியாளர் இருக்க வேண்டும் என்ற வீதத்தில், வேலைவாய்ப்பு உள்ளதைக் காட்டினார்.

செயல் திறம் மிக்க மாணவர்களுக்கு சில வாய்ப்புகளை அளிப்பேன் என்று கூறினார். இவ்விழாவில் FOOD XPLORE’14ன் செயலாளர் சோ. புதியபாரதி அவர்கள் வரவேற்புரையை

வழங்கினார். இக்கருத்தரங்கில் ஆராய்ச்சி சுருக்கங்களை உள்ளடக்கிய SOUVENIR’14 என்ற புத்தகத்தை துணைவேந்தர் அவர்கள் வெளியிட்டார்.

இறுதியாக பின்னர் இவ்விழாவின் துணைச் செயலாளர் ரா. சுசிரேகா அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்